# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை04 வெள்ளிக்கிழமை 17.01.2025 கதிர் 99



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




## யாழ். பல்கலைக்கழகத்தில் ‘பொங்கு தமிழ்’ பிரகடனத்தின் 24 ஆவது எழுச்சி நாள் நிகழ்வு



‘பொங்கு தமிழ்’ பிரகடனத்தின் 24 ஆவது ஆண்டு எழுச்சி நாள் நிகழ்வு இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

‘பொங்கு தமிழ்’ பிரகடன பொது நினைவுத் தூபி முன்பாக இடம்பெற்ற ‘பொங்கு தமிழ்’ பிரகடன உரையைத் தொடர்ந்து ‘பொங்கு தமிழ்’ தூபிக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

இதில் யா. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

17.01.2001 அன்று தமிழ் மக்களின் 7➤

# ரணில் – சஜித்தை இணைக்கும் பேச்சுக்கு குழுக்கள் நியமனம்



### தெற்கு அரசியலில் திடீர் திருப்பம்

**ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒரு கூட்டணியின் கீழ் ஒன்றிணைப்பதற்குரிய பேச்சுகளை முன்னெடுப்பதற்காக இரு தரப்புகளில் இருந்தும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.** 7➤

தாயாரின் தற்கொலை முயற்சியின்போது

## மேல்கொத்மலை நீர்த்தேக்கத்துக்குள் வீழ்ந்து மாயமான 4 வயது சிறுவன் சடலமாக மீட்பு!



(க.கிஷாந்தன்)

மேல்கொத்மலை நீர்த்தேக்கத்துக்குள் காணாமல்போயிருந்த 4 வயது சிறுவனின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

தினேஷ் ஹம்சின் என்ற சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தலவாக்கலைப் பொலிஸாரும் மேலகொத்மலை நீர்த்தேக்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகளும் 7➤

## ‘கிளீன் ஸ்ரீலங்கா’ தொடர்பில் 21, 22 இல் சபையில் விவாதம்



நாடாளுமன்றம் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் 7➤

## மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பிரிட்டன் தூதுவருடன் மனோ கலந்துரையாடல்

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் எம்.பிக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் கொழும்பில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் சமூக - பொருளாதார தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் இங்கிலாந்தின் வகிபாகம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், மலையக மக்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான 7➤



**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

# களுதாவளைக் கடலில் மர்மப்பொருள்



மட்டக்களப்பு ஜன 17

மட்டக்களப்பு - களுதாவளைக் கடற்கரையில் இன்று மரமப் பொருள் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

இன்றைய தினம் அதிகாலை வேளையில் கடற்கரைக்குச் சென்ற மீனர்கள் தாம் இதுவரையில் அறிந்திராத மர்மப் பொருள் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதை அவதானித்துள்ளதாகவும், பின்னர் அதனைக் கரைசேர்த்து வைத்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இரும்பு உலோகத்தில் செய்யப்பட்டு அதன்மேல் பைரினால் வார்க்கப்பட்டு இளம் நீலக் கலரில் கூம்பக வடிவில் அடைக்கப்பட்டதாக இப்பொருள் பெரிய அளவில் காணப்படுகின்றது. அதன் அடியில் 12 டு ஆ எனும் எழுத்துக்களும் காணப்படுகின்றன.

இப்பொருளின் மேற்பகுதியில் சிறியளவு வலைமுடிச்சு, டயர்களும் காணப்படுகின்றன. இது பெரிய கப்பல்களின் ஒரு பாகமாக இருக்கலாம் என அப்பகுதி மீனவர்கள் தெரி விப்பதோடு இவ்வாறு மர்மப் பொருள் கரை ஒதுங்கியுள்ளமை தொடர்பில் கடற்படைக்கு தாம் அறிவித்துள்ளதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

# 61 இலட்சத்தை இழந்த யாழ் .இளைஞன்!

கொழும்பு, ஜன 17

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தாக கூறி 61 இலட்ச ரூபாய் பணத்தினை மோசடி செய்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாக 61 இலட்ச ரூபாய் பணத்தினை பெற்ற பின்னர் , இளைஞனை வெளிநாடு அனுப்புவதற்கு எந்த நடவடிக்கையும் சந்தேகநபர்கள் எடுக்கவில்லை.

இந்நிலையில் , பாதிக்கப்பட்ட இளைஞன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பணத்தினை பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் மூவரை கைது செய்தனர்.

கைதான சந்தேக நபர்களை நேற்றைய தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை மூவரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (ஐ)

# இருளில் மூழ்கும் நெடுந்தீவு மக்கள்

யாழ்ப்பாணம ஜன 17

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பிரதேசத்தில் தினமும் 07 மணி நேர மின் வெட்டு அமுல் படுத்தப்படுவதனால் தாம் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக நெடுந்தீவு மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேசத்திற்கு இலங்கை மின்சார சபையினால் நான்கு மின் பிறப்பாக்கிகள் மூலமே மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இரண்டு மின் பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ளன.

இதன் காரணமாக தினமும் 07 மணி நேரத்திற்கு மேல் மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் நாம் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி பழுதடைந்த மின் பிறப்பாக்கிகளை உடனடியாக திருத்த வேலைகளை மேற்கொண்டு , சீரான மின் விநியோகத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நெடுந்தீவு மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

(ஐ)

# அதிவேக வீதியில் கோர விபத்து 19 ரஷ்ய பயணிகள் காயம்



கொழும்பு, ஜன 17

தெற்கு அதிவேக வீதியில் இன்று காலை ரஷ்ய சுற்றுலா பயணிகளை ஏற்றுச் சென்ற தனியார் பஸ் ஒன்று சீமெந்து ஏற்றிச் சென்ற லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பஸ் சாரதி உயிரிழநதுள்ளதுடன், சுமார் 19 சுற்றுலாப் பயணிகள் காயமடைந்துள்ளனர். தங்காலை நோக்கிச் செல்லும் வீதியில் 138 ஆம் மைல்கல் பகுதிக்கு அருகில் அதிவேகமாக பயணித்த பஸ் லொறியின் பின்பகுதியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் காயமடைந்தவர்கள் தங்காலை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை இந்த விபத்து இடம்பெற்ற போது சுமார் 30 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பஸ்ஸில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# சி.ஐ.டிக்கு பின்கதவால் வந்தார் கோட்டாபய

கொழும்பு, ஜன 17

முன்னாள்ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாக்குமூலம் அளிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு சற்று முன்னர் வந்தார். அவர் சிஐடியின் பின்புற வாயிலுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

கதிர்காமத்தில் உள்ள ஒரு காணிப் பிரச்சினை தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்வதற்காக அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டதாகத் தெரிவிககப்பட்டது.

இந்த மாத தொடக்கத்தில், கதிர்காமத்தில் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான காணியின் உரிமை குறித்து வாக்குமூலம் அளிக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ஷவை சிஐடி அழைத்திருந்தமை குறிப் பிடத்தககது. (ஐ)

# பொறியில் சிக்கிய சிறுத்தையின் சடலம் மீட்பு



கொழும்பு, ஜன 17

கொழும்பு, ஜன 17 பொறியில் சிக்கி இறந்த சிறுத்தையின் சடலம் வியாழக்கிழமை( 16) ஆம் திகதி மதியம் கண்டெடுக்கப்பட்டதாகவும், அந்த உடல் கம்பளை வன விலங்கு அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் புஸ்ஸல்லாவை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புஸ்ஸல்லாவை பொலிஸ் பிரிவுக்கு சொந்தமான நயபன தோடடத்தின் மேல் பகுதியில் வேட்டைககாரர்கள் வைத்த வலையில் சிக்கி சிறுத்தை ஒன்று உயிரிழந்துள்ளதாக தோட்டத் தொழிலாளர்கள், புஸ்ஸல்லாவை பொலிஸாருக்கு தகவல் அளித்திருந்தனர்.

உயிரிழந்த சிறுத்தையின் சடலம், நீதவானின் உத்தரவின் பேரில் ரந்தெனிகல வனவிலங்கு கால்நடை மருத்துவமனைக்கு அனுப்பப்படும் என்று வனவிலங்கு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (ஐ)

# குறுஞ்செய்திகள் தொடர்பில் அவசர அறிவிப்பு

கொழும்பு, ஜன 17

தொலைபேசிகளில் வரும் குறுஞ்செய்திகள் தொடர்பில் இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு மக்களுக்கு முக்கிய அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி பணம் வழங்குவதாகக் கூறி கையடக்கத் தொலைபேசிகளில் வரும் குறுஞ்செய்திகள் மற்றும் தொலைபேசி அழைப்புகளைக் கண்டு ஏமாற வேண்டாம் என்று இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு அறிவுறுத்துகிறது.

போலியான தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு பணம் வசூலிப்பவர்கள் குறித்து தகவல் கிடைத்துள்ளதாக அதன் சிரேஷ்ட பொறியியலாளர் சாருக தமுனுகல தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இந்நாட்களில், உங்கள் கையடக்க தொலைபேசிகளுக்கு போலி செய்திகள் வரக்கூடும். இதன் மூலம் நீங்கள் பரிசுத் தொகையை வென்றதாகக் கூறலாம்.

பல்வேறு சலுகைகள், வீட்டிலிருந்து வேலை செய்யும் வாய்ப்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் போன்றவற்றைப் பற்றிய செய்திகளை நீங்கள் பெறலாம்.

இதுபோன்ற செய்திகள் மூலம் உங்கள் தனிப்பட்ட தகவல்களை அவர்கள் கோரலாம். எனவே நீங்கள் உங்களது தனிப்பட்ட தகவல்களை அவர்களுக்கு வழங்க வேண்டாம் எனவும் அவர் அறிவுத்தியுள்ளார்.

அதேவேளை சமீபத்தில் சைபர் தாக்குதலுக்கு உள்ளான அரச அச்சகத் திணைக்களத்தின் இணைத்தளம் குறித்து சாருக தமுனுகல கூறுகையில் இந்த சைபர் தாக்குதல் குறித்த இணையத்தளத்தில் உள்ள பல பலவீனங்களால் ஏற்பட்டிருக்கலாம் என்பதை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்.

இதை விரைவில் வழமைக்கு கொண்டுவருவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(ஐ)

# இலங்கையுடன் ஒன்றிணையும் அமெரிக்கா





கொழும்பு, ஜன 17

கலாச்சாரஅமைச்சு மற்றும் மத்திய கலாச்சார நிதியம் ஆகியவற்றுடன் இணைந்து, யுனெஸ்கோ உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பொலன்னறுவை பண்டைய நகரத்திற்குள் அமைந்துள்ள ஒரு முக்கிய தளமான, பண்டைய தூபாராம பிரதிமை மண்டபத்தைப் பாதுகாப்பதற்காக,ஒரு புதிய பாதுகாப்பு செயற்திட்டத்தினை இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஆரம்பித்து வைத்தது.

கலாச்சாரப் பாதுகாப்பிற்கான அமெரிக்கத் தூதுவர்கள் நிதியத்திலிருந்து (AFCP) வழங்கப்படும் 109,000 அமெரிக்க டொலர்கள் (32மில்லியன் ரூபாவிற்கும் அதிக) பெறுமதியான மானியத்தின் மூலம் நிதியளிக்கப்படும் இம்முன்முயற்சியானது, எதிர்கால சந்ததிகளுக்காக இலங்கையின் கலாச்சார மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டினைப் பிரதிபலிக்கிறது. புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலீ சங் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

“அமெரிக்காவும் இலங்கையும் பரஸ்பர மரியாதை மற்றும் பகிரப்பட்ட விழுமியங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பங்காண்மையின் ஒரு நீண்ட வரலாற்றைப் பகிர்ந்து கொள்கின்றன. ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்துதல், நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் தூபாராம பிரதிமை மண்டபம் போன்ற கலாச்சார மரபுரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற விடயங்களில் நாம் ஒன்றாக இணைந்து பணியாற்றியுள்ளோம். கலாச்சாரப் பாதுகாப்பிற்கான தூது வர்கள் நிதியம் போன்ற முன்முயற்சிகள் ஊடாக, அமெரிக்க மக்கள் சார்பாக, தனது மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், நிலைபேறான சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்பதற்கும், மற்றும் தனது வரலாற்று மற்றும் கலாச்சார செழுமையினைபார்வையிடுவதற்காக உலகளாவிய பார்வையாளர்களை ஈர்ப்பதற்கும் இலங்கைக்கு நாங்கள் தொடர்ந்து உதவி செய்கிறோம்.” என வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வைபவத்தில் தூதுவர் சங் வலியுறுத்தினார்.

“கலாச்சாரப் பாதுகாப்பிற்கான தூதுவர்கள் நிதியத்தினூடாக,அமெரிக்காவானது, இலங்கையின் கலாச்சாரப் பொக்கிஷங்களைப் பாதுகாப்பதில் தான் கொண்டுள்ள உறுதிப்பாட்டை மீண்டுமொருமுறை வெளிப்படுத்துகிறது. எமக்கிடையிலான பிணைப்பை பலப்படுத்துவதுடன், இலங்கையின் மரபுரிமைகளை மட்டுமன்றி,

எமது நாடுகளுக்கிடையிலான தொடர்பினையும்பாதுகாப்பதில்அமெரிக்கா கொண்டுள்ள ஆழமான ஈடுபாட்டினை இவ்வொத்துழைப்பு பிரதிபலிக்கிறது.” என இவ்வைபவத்தில் கலந்துகொண்ட புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

பொலன்னறுவை இராச்சியத்தின் ஒரு பகுதியாக 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தூபாராம பிரதிமை மண்டபமானது, தனித்துவமான வளைந்த செங்கற்கூரை மற்றும் பிரமிப்பூட்டும சுவர்ப்பூச்சுஅலங்காரங்களைக்கொண்ட ஒரு நினைவுச்சின்னமாகும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பொக்கிஷமானது காலப்போக்கில் சுற்றுச்சூழல் காரணிகளால் சேதமடைந்துள்ளது. அதன் கலாச்சார மற்றும் வரலாற்று முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதேவேளை, அது மேலும் சேதமடைவதைத் தடுப்பதே இந்தப் பாதுகாப்புச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

கலாச்சாரப் பாதுகாப்பிற்கான அமெரிக்கத் தூதுவர்கள் நிதியம் (AFCP) பற்றி: கலாச்சாரப் பாதுகாப்பிற்கான அமெரிக்கத் தூதுவர்கள் நிதியமானது (AFCP) கடந்த 23 வருடங்களாக உலகளாவிய ரீதியில் 140இற்கும் மேறபட்ட நாடுகளில் கலாச்சாரப் பாதுகாப்பு முயற்சிகளுக்கு உதவி செய்துள்ளது. 2001ஆம் ஆண்டு முதல் இலங்கையில் குறிப்பிடத்தக்க கலாச்சார மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பாதுகாப்பதற்கான17 செயற்திட்டங்களில் இலங்கையின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள்,வரலாற்றாசிரியர்கள் மற்றும் சமயம்சார்ந்த சமூகங்களுடன் அமெரிக்கா ஒத்துழைப்புடன் பணியாற்றியுள்ளது. ரஜகல பௌத்த வன மடாலயத்தினை பாதுகாத்தல், அனுராதபுரம் தொல்பொருள் நூதனசாலையிலுள்ள சேகரிப்புகளைப் பாதுகாத்தல், மட்டக்களப்பு டச்சுக் கோட்டையினை மறுசீரமைத்தல் என்பனவும் இச்செற்திட்டங்களில் உள்ளடங்குகின்றன. மிக சமீபத்தில், கண்டி புனித தந்த தாது ஆலய வளாகத்தினுள் அமைந்துள்ள கண்டி அரசர்களின் அரண்மனை மற்றும் தொல்பொருள் நூதனசாலை ஆகியவற்றினை பாதுகாப்பதற்கு அமெரிக்கா உதவி செய்தது.இப்பாதுகாப்பு முயற்சிகள் தரையினையும் தாண்டி விரிவடைகின்றன. ஹம்பாந்தோட்டை கடற்பகுதியில் காணப்படும்ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் காணப்படும் மிகவும் பழமை வாய்ந்த கப்பல் சிதைவான கொடவாய கப்பல் சிதைவினை பாதுகாப்பதற்கும் AFCP ஊடாக அமெரிக்கா உதவி செய்கிறது.

மனிதகுலத்தின் பகிரப்பட்ட வரலாறு மற்றும் பங்களிப்புகளின் ஒரு சக்திவாய்ந்த நினைவூட்டலாக கலாச்சார பாரம்பரியம் விளங்குகிறது. அவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதனூடாக, உலகெங்கிலும் காணப்படும் பல்வேறு கலாச்சாரங்கள் மீது தான் கொண்டுள்ள ஆழ்ந்த மரியாதையினை அமெரிக்காவெளிப்படுத்துகிறது.பண்டைய கட்டமைப்புகளை புனரமைப்பது முதல், அரிய கையெழுத்துப் பிரதிகளைப் பாதுகாபபது, முக்கிய தொல்பொருள் தளங்களைப் பாதுகாப்பது மற்றும் மறைந்து வரும் பாரம்பரியங்களை ஆவணப்படுத்துவது வரை, யுகுஊீதிட்டங்கள் விலைமதிப்பற்ற மரபுரிமைகளைப் பாதுகாக்கின்றன. AFC°முன்முயற்சிகள் வரலாற்றைப் பாதுகாக்கின்றன, ஒற்றுமை மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றை வளர்ப்பதன் மூலம் சிவில் சமூகத்தை பலப்படுத்துகின்றன, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றினூடாக நல்லாட்சிக்கு உதவி செய்கின்றன, மற்றும் வேலை வாய்ப்புகள், வருமானம் மற்றும் நிலைபேறான வளர்ச்சி போனறவற்றை உருவாக்குவதன் மூலம் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துகின்றன.(ஐ)

# பரீட்சைக்குச் சென்ற மாணவன் திடீர் மரணம்

கொழும்பு, ஜன 17

புத்தளம் , கற்பிட்டி - பூலாச்சேனை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் நடைபெறும் மூன்றாம் தவணை பரீட்சைக்கு சென்ற மாணவன் ஒருவன் உடல் நலக்குறைவு காரணமாக வெள்ளிக்கிழமை(16) பிற்பகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயரிழுந்துள்ளான்.

பூலாச்சேனை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் 6ஆம் தரத்தில் கல்வி பயிலும் பூலாச்சேனை பகுதியைச் சேர்ந்த மபாஸ் முஹம்மது மஷாப் எனும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

2024 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வரும் நிலையில், பூலாச்சேனை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த செயல்முறை திறன் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக குறித்த மாணவன் பாடசாலைக்குச் சென்றுள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, ஆஸ்மதுமா (வீசிங்) எனும் நோயினால் அவதிப்பட்டு வந்த குறித்த மாணவன் , பாடசாலைக்கு வருகை தந்த பின்னர் திடீரென வீசிங் நோயால் அவதிப்பட்டுள்ளார்.

அதனையடுத்து, குறித்த மாணவன் வீசிங் நோய்க்காக பயன்படுத்தும் இன்ஹேலர் எனும் இயந்திரத்தை பாவித்துள்ள போதிலும், தனக்கு மூச்சு எடுப்பதற்கு சிரமமாக உள்ளதாக அந்த மாணவன் ஆசிரியை ஒருவரிடம் கூறியுள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, உடனடியாக அங்கிருந்த ஆசிரியர்கள் குறித்த மாணவனை மாம்புரி கிராமிய வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அந்த மாணவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டான் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மாணவனின் ஜனாஸா பிரேத பரிசோதனைக்காக தற்போது புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நகைக்கடையில் பணத்தை பறித்துச் சென்ற மர்மக் கும்பல்

கொழும்பு, ஜன 17

யாழ்ப்பாணம் - கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடையொன்றுக்குச் நேற்று மதியம் சென்ற குழுவொன்று 30 லட்சம் ரூபாய் பணத்தை பறித்துச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் புலனாய்வு பிரிவு என தெரிவித்து நகைக் கடைக்குள் நுழைந்த மூவரடங்கிய குழு சோதனை நடத்தப்போவதாக தெரிவித்து கடையில் இருந்தவர்களுடன் அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டு பணத்தை பறித்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

கண்காணிப்பு கெமராக்களின் உதவியுடன் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(ஐ)

# திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்பு

கொழும்பு, ஜன 17

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் ஜனவரி முதல் வாரத்தில் திருடிச்செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவம் தொடர்பில் திருடிச்செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளரினால் அன்றைய தினம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த முறைப்பாட்டிற்கமைய விசாரணைகளை மேற்கொண்ட சம்மாந்துறை பொலிஸார் பொத்துவில் பிரதேசத்தில் குறித்த மோட்டார் சைக்கிள் உட்பட சந்தேகநபரையும் கைது செய்துள்ளனர். (ஐ)

# மும்பையை பாதுகாப்பற்ற நகரம் என முத்திரை குத்துவதா? கேள்வியெழுப்பியுள்ள பட்னாவிஸ்




மும்பையை பாதுகாப்பற்ற நகரம் என முத்திரை குத்துவதா? என முதல் மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் ஆவேசமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

மகாராஷ்டிர மாநிலத்தின் பாந்த்ராவில் பாலிவுட் நடிகர் சைஃப் அலிகானை நேற்று அதிகாலை இவரது வீட்டிற்குள் நுழைந்த அடையாளம் தெரியாத மர்ம நபர், கத்தியால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

படுகாயம் அடைந்த சைஃப் அலிகான் லீலாவதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இதுதொடர்பாக மும்பை பொலிஸார் வழக்குப் பதிவு செய்து மர்ம நபரை தேடி வந்தனர்.

இதற்கிடையே, குற்றவாளியின் சிசிடிவி புகைப்படத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

சைஃப் அலிகான் மீதான கத்திக்குத்து தாக்குதலுக்கு பல்வேறு அரசியல்கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர். சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து வருவது பற்றி மாநில அரசை கடுமையாக சாடினர்.

இந்நிலையில், கத்திக்குத்து சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த முதல் மந்திரி தேவேந்திர பட்னாவிஸ், இது ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவம். மும்பையை பாதுகாப்பற்றது என முத்திரை குத்துவது சரியல்ல என தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

மும்பை நாட்டின் மிகவும் பாதுகாப்பான மெகா நகரம். இந்த சம்பவம் தீவிரமானது மற்றும் துரதிர்ஷ்டவசமானது.

ஆனால் நகரத்தை பாதுகாப்பற்றது என முத்திரை குத்துவது தவறு. இதுதொடர்பான அனைத்து விவரங்களையும் பொலிஸார் வழங்கி உள்ளனர். இது என்ன வகையான தாக்குதல், உண்மையில் இதற்குப் பின்னால் என்ன இருக்கிறது, தாக்குதலுக்குப் பின்னால் உள்ள நோக்கம் என்ன என்பது விசாரணை செய்யப்பட்டு வருகிறது. கத்திக்குத்து சம்பவம் தொடர்பாக விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.



## எய்ம்ஸ் மருத்துவமனைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட ராகுல் காந்தி!

நேற்று இரவு திடீரென எய்ம்ஸ் மருத்துவமனைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட ராகுல் காந்தி அங்கு நோயாளிகளைசந்தித்து அவர்களது குறைகளை கேட்டறிந்துள்ளார்.

சமீப காலமாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி லொறி சாரதி , செருப்பு தைக்கும் தொழிலாளி, ரயில்வே சுமை தூக்கும் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல தரப்பட்ட தொழில் சார்ந்தவர்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி அது தொடர்பான காணொளிகளை பகிர்ந்து வருகிறார். இந்நிலையில், தலைநகர் டெல்லியில் செயல்பட்டு வரும் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு ராகுல் காந்தி சென்றுள்ளார்.

எய்ம்ஸ் மருத்துவமனையைச் சுற்றியுள்ள சாலைகள், நடைபாதைகள் மற்றும் சுரங்கப்பாதைகளில் நோயாளிகள் மற்றும் குடும்பத்தினரைச் சந்தித்து அவர்களின் பிரச்சனைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்தார். இதுதொடர்பாக, ராகுல் காந்தி இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ள செய்தியில், இன்று நான் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு வெளியே சிகிச்சைக்காக வந்த நோயாளிகளையும் அவர்களது குடும்பத்தினரையும் சந்தித்தேன். அவர்கள் சாலைகள், நடைபாதைகள் மற்றும் சுரங்கப்பாதைகளில் தூங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். குளிர்ந்த நிலம், பசி மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் நம்பிக்கையின் சுடரை எரித்துக் கொண்டே இருக்கிறார்கள். மத்திய அரசும், டெல்லி அரசும் பொதுமக்களுக்கான பொறுப்பை நிறைவேற்றுவதில் முற்றிலும் தோல்வி அடைந்துள்ளன என காட்டமாக தெரிவித்துள்ளார்.

## துப்புரவு தொழிலாளர்களுக்கு அரசியலமைப்பு சட்ட நகல்களை விநியோகித்த பா.ஜ.க. – ஏன் தெரியுமா?




பிரயாக்ராஜில் நடந்த மகா கும்பமேளாவில், பா.ஜ.க.வின் உத்தரப் பிரதேச பிரிவு தலைவர்கள் துப்புரவு தொழிலாளர்களுக்கு அரசியலமைப்பு சட்டத்தின் நகல்களை விநியோகித்தனர்.

பிரயாக்ராஜில் உள்ள மத கூட்டம் ஒற்றுமையின் ஒரு சிறந்த கொண்டாட்டம் என்றும், இது அரசியலமைப்பு உத்தரவாதம் அளிக்கிறது என்றும் அவர்கள் கூறினர்.

இந்திய அரசியலமைப்பின் 75 ஆண்டுகளைக் கொண்டாடும் நாடு தழுவிய பிரச்சாரமான “சம்விதான் கௌரவ் அபியான்”- பிரச்சாரத்தை தொடங்கிய பா.ஜ.க., இந்த முயற்சியின் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதும் உள்ள தாழ்த்தப்பட்டவர்களை கௌரவிக்கின்றது.

மகா கும்பமேளாவில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மாலை அணிவித்து, அரசியலமைப்பின் நகல்களை வழங்கி பாராட்டிய உத்தர பிரதேச பா.ஜ.க. செயலாளர் அபிஜத் மிஸ்ரா, “பா.ஜ.க. அல்லாத கட்சிகள் மற்றும் அரசாங்கங்களால் வெறும் வாக்கு வங்கியாக குறைக்கப்பட்டவர்களை கௌரவிக்க நாங்கள் இங்கு வந்தோம்.

இப்போது, ஒரு வலிமையான, உணர்திறன் மிக்க தலைவர் நாட்டை வழிநடத்துவதால், மாற்றம் தெளிவாக தெரிகிறது” என்றார்.

இது தொடர்பில் தொடர்ந்து பேசிய அவர், “மற்ற கட்சிகள் தாழ்த்தப்பட்டவர்களை மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரை வாக்கு வங்கிகளாகப் பார்க்கின்றன. எங்கள் கட்சி அவர்களை மதிக்கிறது. மகா கும்பமேளா ஒற்றுமையின் சிறந்த கொண்டாட்டமாகும், இது அரசியலமைப்பு உத்தரவாதம் அளிக்கும் ஒன்று. அதனால்தான் நமது அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் கொண்டிருந்த ஒற்றுமை என்ற கருத்தை வலுப்படுத்த அரசியலமைப்பின் நகல்களுடன் நாங்கள் வந்தோம். நமது அரசியல் எதிரிகள் அதை மறுக்க விரும்புகிறார்கள்,” என்று கூறினார்.

## பொறியியல் மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த சாரதியை தேடும் பணி தீவிரம்!



தெலுங்கானா மாநிலத்தில் பொறியியல் மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநிலம் இப்ராஹிம் பட்டினம் பகுதியில் தனியார் விடுதியில் தங்கி பொறியியல் கல்லூரியில் படித்து வரும் 19 வயது மாணவி ஒருவருக்கே இவ்வாறு நேர்ந்துள்ளது.


நேற்று முன்தினம் இரவு மாணவி அறையில் தூங்கிக் கொண்டிருந்த போது மர்ம நபர் ஒருவர் மாணவியின் அறை கதவைத் தட்டியுள்ளார். விடுதியில் பணிபுரியவர்கள் தான் வந்திருப்பார்கள் என நினைத்த குறித்த மாணவி கதவை திறந்ததும் மாணவியை உள்ளே தள்ளிவிட்டு மர்ம நபர் கதவை உள்புறமாக பூட்டி மாணவியை தாக்கி மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

மர்ம நபர் சென்ற பிறகு தனக்கு நேர்ந்த கொடுமையை நினைத்து கதறி அழுத மாணவி இதுகுறித்து பொலிஸ் எண் 100-க்கு அழைத்து தனக்கு நடந்த கொடுமை பற்றி தகவல் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து சம்பவ இடத்திருக்கு விரைந்த தனிப்படை பொலிஸார் படுகாயங்களுடன் மாணவியை மீட்டு அங்குள்ள மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த சாரதி ஒருவர் மீது பொலிஸாருக்கு சந்தேகம் எழவே அவரை தேடிச் சென்றபோது அவர் தலைமறைவாகி விட்டார் என்பது தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபரை தேடும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.




# ஆதிக்க சமூகத்தில் பெண் விடுதலை சாத்தியமா?

நாம் வாழும் சமூகம் எவ்வளவு மாறினாலும் நம் மனநிலை இன்னும் பழமை வாய்ந்ததாகவே காணப்படுகிறது. உடை என்பது உடலை மறைபபதற்கே. அதனால் எல்லோரும் (குறிப்பாக பெண்கள்) உடலை மறைத்தவாரே உடை அணிய வேண்டும் என்கிறார்கள் .குறிப்பாக பெண்கள்" ஏன்னென்றாள் ஆண்களை விட பெண்கள் கவர்ச்சிகரமானவர்கள். இதனால் ஆண்கள்பெண்களைப்பார்த்து சபலப்படக்கூடும் அதனால் பெண்கள் தங்கள் உடலை முழுவதுமாக மூடிய ஆடைகளை அணிய வேண்டும் என்கிறார்கள் .

ஆம் யார் நீங்கள்.? இவ்வளவு கரிசனையுடன் எங்கே இருந்தீர்கள் இவ்வளவு காலமாக எனக் கேட்கத் தோன்றுகிறது. நான் ஏன் இன்னொருவரின் சொற்களைக் கேட்டு அவர்களிற்கு பிடித்தாற் போல் வாழ வேண்டும் எனக்கு பிடித்த ஆடைகளை அணிய நான் யாருடைய அனுமதி வாங்க வேண்டும்.. "இல்லை உங்கள் இஷ்டப்படி உங்களை ஆடை அணிய விட முடியாது. கவர்ச்சிகரமான ஆடை அணியும் பெண்கள் மேல் சபலப்பட்டு பெண்களை வன்புணர்வு செய்யும் ஆண்கள் பலர் உள்ளனர். அதனால் நீ உன்னை பாதுகாத்துக்கொள்" என்று கூறியபடி ஒரு கூட்டம் இருக்கிறது.

4 வயது பெண் குழந்தை முதல் 80 வயதான பாட்டி வரை வன்புணர்வுக்கு உள்ளாகிறார்கள். இச் சம்பவங்களுக்கு காரணம் அவர்கள் அணிந்திருந்த ஆடை என்று கூற முடியுமா?


இங்கு பிரச்சனை அணியும் ஆடையில் இல்லை. பார்க்கும் பார்வையிலேயே உள்ளது. சில பெண்கள் இவர்களின் கதைகளினை பொருட்படுத்தாமல் அவர்களுக்கு பிடித்த ஆடைகளை அணிந்து அவர்களுக்கு பிடித்தது போல வாழ்ந்து வருகிறார்கள்.. அப்படிப்பட்ட பெண்களை நடத்தை கெட்டவள் என்ற பட்டத்தை இலகுவாக கொடுக்கிறோம.அவள் சரி இல்லை. அவள் அணியும் ஆடையை பார்த்தாலே தெரியவில்லையா அவள் எப்படிப்பட்டவள் என்று அது எப்படி ஒரு பெண் அணியும் ஆடையை வைத்து அந்தப் பெண் எப்படிப்பட்டவள் என்று முடிவு செய்கிறார்கள்.

அந்த அளவிற்கு அறிவுத்திறன் கூடிய சமூகமாக வளர்ந்துவிட்டோமா என்ன..?

உடனே வயது போனாலே இப்படித்தான் யாரையும் குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பார்கள் என்று அவர்கள் மேல் பழியைப் போட வேண்டாம் நான் சொல்வது அனைத்தும் இன்றைய தலைமுறையினருக்கே..

ஒரு பெண்ணை பற்றிய வதந்தியினை விரைவாக பரப்பி விடுகிறார்கள்.அதனால் அவள் அனுபவிக்கும் வலிகளினை குறித்த கவலை யாரிடமும் இல்லை.அவள் அப்படித்தான் என்று விட்டு கடந்து செல்கிறார்கள்.

நாம் அனைவரும் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். பெண்கள் தங்கள் இஷ்டப்படி ஆடை அணிவதற்கு முழு சுதந்திரம் உண்டு. இல்லை நீ இதனை அணியலாம், இதனை அணியக்கூடாது போன்ற கட்டளைகளை இடுவதற்கு நாம் யார்..? இதுவும் ஒரு வகையான அடக்குமுறை என்பதனை நாம் நினைவுகொள்ள வேண்டும்.. ஒரு பெண்ணை அடித்து உதைத்து துன்புறுத்துவது மட்டுமே அடக்குமுறையாகாது.ஒரு பெண் விரும்பாத ஒன்றை அவள் மேல் திணிப்பதும் அவளுக்கு மனதளவில் கொடுக்கக்கூடிய அடக்குமுறையே.. பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அனைத்தும் ஒழிந்து இன்று பெண்கள் சுதந்திரமாக இருக்கின்றார்கள் என்று வாய்மொழியாய் சொல்லலாம். ஆனால் இன்றும் பெண்கள் பல அடக்குமுறைகளுக்கு முகம்கொடுக்கின்றார்கள்..அன்று உடலால் அனுபவித்தார்கள். இன்று மனதால் அனுபவிக்கின்றார்கள் பெண்கள் வெளிப்படுத்த முடியாத பல பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்கின்றார்கள், வெளி இடங்களில் சந்திக்கின்ற பிரச்சனை களை குறித்து விட்டில் உள்ளவர்களிடம் சொன்னால்ண அவர்களின் முதற் கேள்வி "உன்னை யார் அந்த இடத்திற்கெல்லாம் போக சொன்னது, இனி நீ எங்கும் செல்லத்தேவையில்லை."என்பதுதான்.இதற்குப் பயத்திலேயே பல பெண்கள் தமது பிரச்சனைகளை வீட்டில் சொல்வதில்லை. எந்தப் பிரச்சனை வந்தாலும் எங்கள் வீட்டுப்பெண்ணுக்கு நாங் கள் இனுக்கிறொம் என்ற நம்பிக்கையை கொடுங்கள்.அச்சமின்றி பேச இளம்பெண்களுக்கு ஊக்கம் கொடுங்கள். இந்த சமூகம் ஆண்களுக்கு மட்டும்மல்ல பெண்களுக்குமானது என்று சொல்லிக்கொடுங்கள். அவர்கள் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது, நாம் உங்களுடனே இருக்கிறோம் என்ற நம்பிக்கையை கொடுப்போம். பெண்களை கடவுளாக பாருங்கள் என்று கூறவில்லை அவர்களை சக மனுஷியாக பாருங்கள் அவ்வளவு தான்



ஆம் யார் நீங்கள்.? இவ்வளவு கரிசனையுடன் எங்கே இருந தீர்கள் இவ்வளவு காலமாக எனக் கேட்கத் தோன்றுகிறது. நான் ஏன் இன்னொ ருவரின் சொற்களைக் கேட்டு அவர்களிற்கு பிடித்தாற் போல் வாழ வேண்டும் எனக்கு பிடித்த ஆடைகளை அணிய நான் யாருடைய அனுமதி வாங்க வேண்டும்.. "இல்லை உங்கள் இஷ்டப்படி உங்களை ஆடை அணிய விட முடியாது. கவர்ச்சிகரமான ஆடை அணியும் பெண்கள் மேல் சபலப்பட்டு பெண்களை வன்புணர்வு செய்யும் ஆண்கள் பலர் உள்ளனர். அதனால் நீ உன்னை பாதுகாத்துக்கொள்" என்று கூறியபடி ஒரு கூட்டம் இருக்கிறது.

# இம்ரான் கானுக்கும் அவர் மனைவிக்கும் சிறை ஊழல் வழக்கில் பாகிஸ்தான் நீதிமன்றம் அதிரடி



ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபி ஆகியோருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ஊழல் தடுப்பு நீதிமன்றம் இன்று வழங்கிய தீர்ப்பில் இம்ரான் கானுக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. புஷ்ரா பீபிக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் இருந்து பாகிஸ்தான் அரசுக்கு வர வேண்டிய பணத்தை ஆல்-கதிர் என்ற பெயரில் அவர்கள் இணைந்து நிறுவிய அறக்கட்டளையில் வரவு வைத்து, அதற்கு பல நூறு ஏக்கர் நிலத்தை இலஞ்சமாக பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த குற்றச்சாட்டை பாகிஸ்தானின் ஊழல் தடுப்பு தேசிய பொறுப்புடைமை பணியகம் கடந்த 2023 இல் முன்வைத்தது.

வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் 3 முறை தீர்ப்பு திகதி ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது வழக்கில் இருவரையும் குற்றவாளிகள் என நீதிபதி நசீர் ஜாவேத் ரண தீர்ப்பளித்தார்.

பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட்டரும், 2018 முதல் 2022 வரை அந்நாட்டின் பிரதமராகவும் இருந்த இம்ரான் கான் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டுக் கடந்த 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் விசாரணை நியாயமான முறையில் நடைபெறவில்லை என்று இம்ரான் கான் ஆதரவாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

## ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் வெளியிட்ட புதிய அறிவிப்பு!




ஏர் இந்தியா எக்ஸ்பிரஸினால் அமீரகம், ஓமன் உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து இந்தியா செல்லும் பயணிகள் பொருட்களைக் கொண்டு செல்ல புதிய விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய சிவில் விமான பாதுகாப்பு பணியகம் மற்றும் மத்திய தொழில்துறை பாதுகாப்பு படை ஆகியவற்றால் செயல்படுத்தப்படும் புதிய விதிமுறைகளின் அடிப்படையில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இது தொடர்பில் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் கூறியிருப்பதாவது இந்த புதிய விதிமுறைகள் பாதுகாப்பை மேம்படுத்தவும், விமான நிலைய செயல்திறனை அதிகரிக்கவும் பயன் உள்ளதாக உள்ளது. இதில் விமான பயணிகள் எடுத்து செல்லும் உடைமைகளுக்கு கடுமையான அளவு மற்றும் எடை கட்டுப்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தியாவுக்கு இயக்கும் முக்கிய விமான நிறுவனங்கள் தங்களது பேக்கேஜ் கொள்கைகளை புதுப்பித்துள்ளன. அதன்படி ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான சேவையில் 2 பைகள் விதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி விமான பயணிகள் சர்வதேச விமானங்களில் செக் இன் உடைமைகளில் மூலம் 2 பைகளை மட்டுமே எடுத்து செல்லலாம். கூடுதல் உடைமைகள் இருந்தால் அதற்கான கட்டணத்தை பயணிகள் செலுத்த வேண்டும்.

சாதாரண வகுப்புகளில் பயணம் செய்யும் பயணிகள் 30 கிலோ வரை உடைமைகளை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர். இந்த உடைமைகள் 2 பைகளில் மட்டுமே இருக்க வேண்டியது அவசியம். அதேபோல் இந்தியாவில் இருந்து அமீரகம் மற்றும் ஓமன் உள்ளிட்ட நாடுகளுக்கு வரும் போதும் 30 கிலோ வரை உடைமைகளை மட்டுமே எடுத்துச்செல்லலாம். பொருளாதார மற்றும் பிரீமியம் டிக்கெட்களுக்கு சாதாரண வகுப்பை விட கூடுதலாக பொருட்களை எடுத்துச்செல்ல பயணிகள் அனுமதிக்கப்படுவர். அதிகமாக பயணிகளின் வருகை இருப்பதால் இந்திய விமான நிலையங்களில் நெரிசல் அதிகரித்து பாதுகாப்பு சோதனைகளில் காலதாமதம் ஏற்படுகிறது. பயணிகள் கொண்டு செல்லும் உடைமைகளை கட்டுப்படுத்துவதன் மூலமாக இந்த தாமதத்தை குறைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடுவானில் வெடித்துச் சிதறிய ஸ்டார்ஷிப் மாற்று வழியில் இயக்கப்பட்ட விமானங்கள்!





ஸ்பேஸ்எக்ஸ்-இன் ஸ்டார்ஷிப் முன்மாதிரி ராக்கெட் விண்ணில் ஏவப்பட்ட சில நிமிடங்களில் நடுவானில் வைத்து வெடித்து சிதறியது.

ராக்கெட் வெடித்து சிதறியதைத் தொடர்ந்து கல்ஃப் ஆஃப் மெக்சிகோ வழியே செல்லக்கூடிய விமானங்களை மாற்று வழியில் இயக்க வலியுறுததப்பட்டன. ஸ்டார்ஷிப் விண்ணில் ஏவப்பட்ட எட்டு நிமிடங்களுக்கு பிறகு ஸ்பேஸ்எக்ஸ் மிஷன் கட்டுபாட்டு மையத்துடனான தொடரை இழந்தது. சோதனை முயற்சியில் ஏவப்பட்ட இந்த ராக்கெட் முதல் பேலோடு போலி செயற்கைக்கோள்களை சுமந்து சென்றது.

"ஸ்டார்ஷிப் உடனான அனைத்து தகவல்தொடர்புகளையும் நாங்கள் இழந்துவிட்டோம் - இது அடிப்படையில் மேல் நிலையில் எங்களுக்கு ஒரு ஒழுங்கின்மை இருப்பதைக் குறிக்கிறது" என்று ஸ்பேஸ்எக்ஸ் தகவல் தொடர்பு மேலாளர் டான் ஹூட் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து அவர் ஸ்டார்ஷிப் தொலைந்து போனதை உறுதிப்படுத்தினார். ஃபிளைட் ரேடார் 24 தளத்தின் படி பதிவுகளின் அடிப்படையில், குறைந்தது 20 வணிக விமானங்கள் மற்ற விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டன. விமானங்களின் மீது சாத்தியமான குப்பைகள் விழுவதை தவிர்க்க பாதை மாற்றியமைக்கப்பட்டன.

இது குறித்து ஸ்பேஸ்எக்ஸ் தலைமை செயல் அதிகாரி எலான் மஸ்க் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், காணொளி ஒன்றை இணைத்து, "வெற்றி நிச்சயமற்றது, ஆனால் பொழுதுபோக்கு உறுதி!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## இனி பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட போவதில்லை: முன்னாள் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ!

இனி பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட போவதில்லை என முன்னாள் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

முன்னாள் கனடா பிரதமர் ஆக இருந்தவர் ஜஸ்டின் ட்ரூடோ. எதிர்ப்பு காரணமாக கட்சித்தலைவர் பதவியில் இருந்தும் பிரதமர் பதவியில் இருந்தும் விலகுவதாக அறிவித்தார்.

புதிய பிரதமர் தேர்வு செய்யப்படும் வரை பதவியில் நீடிப்பேன் என தெரிவித்திருந்தார். கட்சி விதிப்படி, தலைவராக இருப்பவரே பிரதமர் ஆக பதவி ஏற்கமுடியும். இதையடுத்து, புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ செய்தியாளர்கள் சந்திப்பின் போது மேலும் தெரிவித்துள்ளதாவது எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை என முடிவு எடுத்துள்ளேன். அரசியலில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு அடுத்து என்ன செய்வது என முடிவு செய்யவில்லை. அதற்கு நேரமும் இல்லை. தற்போது கனடா மக்கள் அளித்த பணிகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தி வருகிறேன் என தெரிவித்துள்ளார்.

## மேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து முன்னெடுத்த தேடுதலின் போதே சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குடும்பத் தகவாறு காரணமாக தனது நான்கு வயது மகனுடன் தாய் ஒருவர், தற்கொலை செய்துகொள்ளும் நோக்குடன் தலவாக்கலை, மேல்கொத்மலை நீர்த்தேக்கத்துக்குள் நேற்று மாலை குதித்திருந்தார்.

இதனையடுத்து மேற்படி தாய் மீட்கப்பட்டு லிந்துலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிறுவன் காணாமல்போயிருந்தார். இந்நிலையிலேயே சிறுவன் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

41 வயதான மேற்படி பெண் கணவரைப் பிரிந்து பூண்டுலோயா பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு நபருடன் வாழ்ந்துள்ளார். அந்த நபர் மற்றுமொரு திருமணம் செய்துகொள்வது தொடர்பில் எழுந்த பிரச்சினையாலேயே இந்தப் பெண் தற்கொலை செய்துகொள்வதற்கு முற்பட்டுள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

மரண விசாரணைகளின் பின் சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவால்கள், குறிப்பாக பெருந்தோட்ட மக்களின் உரிமைகள் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

"எமது சமூகத்தின் மீட்சிக்கு பிரிட்டிஷ் அரசின் கடமையை நாங்கள் நல்லெண்ணத்துடன் நினைவூட்டினோம்" – என்று மனோ கணேசன் எம்.பி. குறிப்பிட்டார்.

நில உரிமைகள், தேசிய நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஜனநாயக மக்கள் முன்னணியில் சர்வதேச விவகார மற்றும் தொடர்பாடல் உப தலைவர் பாரத் அருள்சாமியும் கலந்துகொண்டார்.

## கிளீன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமரத்ன தலைமையில் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஜனவரி 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி முதல்மு.ப. 10.00 மணிவரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், மு.ப. 11.30 முதல் பி.ப. 5.30 வரை ஆளும் கட்சியால் கொண்டுவரப்படும் 'கிளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெற்று, 22 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாவது நாள் விவாதத்துக்காக ஒத்திவைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

ஜனவரி 22 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 10 மணி முதல் மு.ப. 11 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, மு.ப. 11.30 முதல் பி.ப. 5.30 வரை ஆளும் கட்சியால் கொண்டுவரப்படும் 'கிளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இரண்டாவது நாளாகவும் இடம்பெறும்.

ஜனவரி 23 வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, மு.ப. 11.30 முதல் பி.ப. 3.30 வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் 2413ஃ37 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் 2399ஃ16 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் 2384ஃ35 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 2377ஃ39 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதனையடுத்து, பி.ப. 3.30 முதல் பி.ப. 5.30 வரை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கும் இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 24 வெள்ளிக்கிழமை, மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக முழு நாளும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், ருக்மன் சேனாநாயக்க, ரெஜினோல்ட் பெரேரா, சிறினால் த மெல் மற்றும் மொஹமட் இல்யாஸ் ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைக்காக அன்றைய தினம் மு.ப. 9.30 முதல் பி.ப. 5.30 வரை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர மேலும் தெரிவித்தார்.

அத்துடன், நாடாளுமன்றம் கூடும் இந்த நான்கு நாட்களிலும் மதிய உணவு இடைவேளைக்காக பி.ப. 12.30 மணி முதல் பி.ப. 1.00 மணி வரை ஒதுக்கப்பட்டுள்ளது.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழுவில் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கபீர் ஹாசீம், ஹர்சன ராஜகருண ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரள, பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன உள்ளிட்டவர்கள் பேச்சுகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரு தரப்புகளுக்கும் இடையில் உத்தியோகபூர்வமற்ற விதத்தில் ஏற்கனவே பேச்சுகள் ஆரம்பமாகி இருந்தாலும், அடுத்து வரும் நாட்களில் அதிகாரபூர்வமாக பேச்சுகள் ஆரம்பமாகவுள்ளன.

# கனேடிய பிரஜை கடலில் மாயம்

கொழும்பு, ஜன 17

ஹிக்கடுவ கடற்கரையில் வியாழக்கிழமை (16) மாலை குளித்துக் கொண்டிருந்த 19 வயது கனேடிய நாட்டவர் ஒருவர் காணாமல் போனார்.

ஆபத்தான நீரோட்டங்களின் எச்சரிக்கை அறிகுறிகள் இருந்தபோதிலும், கடலில் குளித்துக் கொண்டிருந்த கனேடிய நாட்டவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டார். காணாமல் போன நபரைக் கண்டுபிடிக்க காவல்துறையினரும் இலங்கை கடற்படையினரும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர், அதே நேரத்தில் ஹிக்கடுவ காவல்துறையினர் விசாரணைகளைத் தொடர்கின்றனர்.

## யாழ்.பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)











அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் எனப் 'பொங்கு தமிழ்' பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.01.2025 இல் வெளியிடப்பெற்றது.